




# சக்கர வியூகம்

SAKKRA VIYUGAM

புலனாய்வு நாளிதழ்

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்"



FLY TOWARDS
DIGITAL INNOVATION
Services / சேவைகள்
✓DIGITAL MARKETING
✓WEB DEVELOPMENT
✓SOFTWARE DEVELOPMENT
9080999823
7695883647
வடக்கு ரத வீதி,சங்கரன்கோவில்



Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 ISSUE: 316 09.05.2026 SATURDAY CHITHIRAI: 26 PRICE : RS.5/-

மலர் : 01 இதழ் : 316 09.05.2026 சனிக்கிழமை சித்திரை : 26 விலை : ரூ.5/–


# பிளஸ் 2 தேர்வு முடிவுகள் வெளியீடு

# "95.20 சதவீத மாணவர்கள் தேர்ச்சி?"

## "புதிய ஆட்சி அமைய உடனடி நடவடிக்கை எடுப்பீர்" : ஆளுநருக்கு மு.க.ஸ்டாலின் வலியுறுத்தல்



சென்னை: மே.9-

'தமிழகத்தில் புதிய அரசு அமைவதில் தாமதம் ஏற்படுவதைத் தவிர்க்கும் பொருட்டு, அரசியல் சட்டப்படி, புதிய ஆட்சி அமைப்பதற்குரிய நடவடிக்கைகளை ஆளுநர் உடனடியாக எடுத்திட வேண்டும்' என திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட சமூக வலைதளப் பதிவில், 'தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தல் முடிவுகள் வெளியாகி, மக்களால் தேர்வு செய்யப்பட்ட சட்டப்பேரவை உறுப்பினர்களின் பட்டியலைத் தேர்தல் ஆணையம் வெளியிட்டு விட்டது. ஏற்கெனவே இருந்த சட்டமன்றத்தையும் கலைத்து ஆளுநர் ஆணையும் பிறப்பித்து விட்டார்.

இப்படியொரு நிலையில், தேர்தலில் வென்ற சட்டப்பேரவை உறுப்பினர்கள் பதவிப் பிரமாணம் எடுத்துக் கொள்வதற்கும், மாநிலத்தின் நலனை முன்னெடுத்துச் செல்வதற்கும் புதிய அரசு அமைய வேண்டியது காலத்தின் கட்டாயம் மட்டுமல்ல, ஜனநாயகத்தின் மிக முக்கியப் பணி.

இந்தச் சூழ்நிலையில் அரசு அமைவதில் தாமதம் ஏற்படுவதைத் தவிர்க்கும் பொருட்டு, அரசியல் சட்டப்படி, புதிய ஆட்சி அமைப்பதற்குரிய நடவடிக்கைகளை ஆளுநர் உடனடியாக எடுத்திட வேண்டும் என திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கேட்டுக் கொள்கிறேன்' எனத் தெரிவித்துள்ளார்.

## "தமிழக ஆளுநர் சட்டப்படியே செயல்படுகிறார்" : வானதி சீனிவாசன்

சென்னை: மே.9-

"தமிழக ஆளுநர் அரசியலமைப்புச் சட்டத்தின்படியே செயல்படுகிறார்" என்று பாஜக மகளிர் அணி தேசிய தலைவர் வானதி சீனிவாசன் தெரிவித்துள்ளார்.

சென்னை தி.நகரில் உள்ள பாஜக மாநில தலைமை அலுவலகமான கமலாலயத்தில் செய்தியாளர்களிடம் அவர் இன்று கூறியது: "தமிழகத்தில் திமுக, அதிமுக, பாஜக, கம்யூனிஸ்ட்கள், விசிக, தேமுதிக, பாமக என கட்சிகளுக்கும் மக்கள் தகுந்த வாய்ப்புகளை வழங்கியிருக்கிறார்கள். எனவே, தமிழக அரசியல் திசை என்பது ஏதோ ஒரு பக்கம் மட்டுமே சாய்ந்துவிட்டதாகக் கருதுவது தவறானது.

கடந்த 2014ம் ஆண்டு முதல், பிரதமர் மோடி தமிழகத்தின் வளர்ச்சியை முன்னிறுத்தி லட்சக்கணக்கான கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களை வழங்கியுள்ளார். தமிழகத்தின் எதிர்காலத்தை மனதில்கொண்டு அவர் ஆற்றியுள்ள பணிகளை, மக்களிடம் கொண்டு சேர்க்கும் பணியைத் தொடர்ந்து பாஜக முன்னெடுக்கும்.

தேர்தல் வெற்றி தோல்விகளை மட்டும் அடிப்படையாகக் கொண்டு பாஜக தன் அரசியல் செயல்பாடுகளை தீர்மானிப்பதில்லை. நாங்கள் அதிகாரத்துக்காக உழைக்கிறோம், வெற்றிக்காக போராடுகிறோம் என்பது உண்மைதான். ஆனால், அதே வேளையில் மக்களுக்கான எங்கள் கடமைகளையும், பணிகளையும் ஒரு சதவீதம்கூட குறைத்துக்கொள்ளாமல், எப்போதும் மக்களுடன் நின்று அவர்களுக்காக உழைப்போம்.

தவெகவுக்கு மக்கள் தற்போது ஒரு மிகப்பெரிய ஆதரவை வழங்கியிருக்கிறார்கள். அதற்கு பல்வேறு காரணங்கள் இருக்கலாம். அதிமுக

திமுக கூட்டணி அமைப்பது தொடர்பாக எங்களுக்கு எந்தவித தகவலும் வரவில்லை. ஆளுநரை பொறுத்தவரை, அவர் அரசியலமைப்புச் சட்டத்தின் படியே செயல்படுகிறார். விருப்பு வெறுப்புகளுக்கு இடமில்லை என்பதை அவர் தெளிவாகவே உணர்த்தியுள்ளார்.

தமிழகத்தில் காங்கிரஸ் கட்சிக்கு மறுவாழ்வு அளித்ததே திமுகதான். ஆனால், தேர்தல் முடிவுகளுக்குப் பிறகு ஒரு கூட்டணியில் இருந்துகொண்டு காங்கிரஸ் இத்தகைய முடிவுகளை எடுக்கிறது என்றால், அவர்கள் எந்த அளவுக்கு திமுகவுக்குத் துரோகம் இழைக்க காத்திருந்திருக்கிறார்கள் என்பது வெளிப்படையாகத் தெரிகிறது" என்று அவர் கூறினார்.

## "தவெகவுக்கு அமமுக ஆதரவு தெரிவிக்கவில்லை" தினகரன் விளக்கம்

சென்னை: மே.9-

'தமிழக வெற்றிக் கழகத்துக்கு அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம் ஆதரவு தெரிவித்திருப்பதாக ஒரு சில ஊடகங்களில் வெளியாகும் செய்திகள் முற்றிலும் தவறானது. அடிப்படை ஆதாரமற்றது' என அக்கட்சியின் பொதுச் செயலாளர் டிடிவி தினகரன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், 'தேசிய ஜனநாயகக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம், தமிழக வெற்றிக் கழகத்துக்கு ஆதரவு தெரிவித்திருப்பதாக ஒரு சில ஊடகங்களில் வெளியாகும் செய்திகள் முற்றிலும் தவறானது. அடிப்படை ஆதாரமற்றது.

அம்மா மக்கள் முன்னேற்றக் கழகத்தின் மன்னார்குடி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.காமராஜ், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சட்டமன்ற உறுப்பினர்களுடன் அவர்கள் தங்கியிருக்கும் புதுச்சேரி தனியார் விடுதியிலேயே தங்கியிருக்கிறார்.

எனவே, ஜனநாயகத்தின் நான்காம் தூண்களாகப் போற்றப்படும் ஊடகங்களும், பத்திரிகைகளும் தங்களின் கடமையையும், பொறுப்புணர்வையும் உணர்ந்து இதுபோன்ற அடிப்படை ஆதாரமற்ற செய்திகளை வெளியிடுவதைத் தவிர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்வதோடு, அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம் தேசிய ஜனநாயகக் கூட்டணியிலேயே அங்கம் வகிப்பது என்ற நிலைப்பாட்டில் உறுதியாக உள்ளது' எனத் தெரிவித்துள்ளார்.



சென்னை, மே.9-

பிளஸ்2 பொதுத்தேர்வு கடந்த மார்ச் மாதம் 2ந்தேதி முதல் 26ந்தேதி வரை நடைபெற்றது. சுமார் 8 லட்சத்துக்கும் மேற்பட்ட மாணவமாணவிகள் இந்த தேர்வை எழுதினார்கள். தேர்வு முடிவு மே 8ந்தேதி (அதாவது இன்று) வெளியாகும் என தற்காலிக அட்டவணையில் அரசுத்தேர்வுத்துறை தெரிவித்து இருந்தது.

இதற்கிடையில் 2026 சட்டமன்ற தேர்தல், புதிய அரசாங்கம் அமைவது போன்ற காரணங்களினால் பிளஸ்2 பொதுத்தேர்வு முடிவு ஏற்கனவே அட்டவணையில் குறிப்பிட்ட தேதியில் வெளியாகுமா? என்ற கேள்வி எழுந்தது.

இதுதொடர்பாக அதிகாரிகளிடம் கேட்டபோது, 'தள்ளிப்போக வாய்ப்பு இருப்பதாகவே தெரிவித்தனர். அதற்கேற்றாற்போல், நேற்றுமுன்தினம் அரசு தேர்வுத்துறையும் பொதுத்தேர்வு முடிவுகள் இறுதி செய்யும் பணிகள் நடைபெற்று வருவதாகவும் அறிவித்தது. இந்தநிலையில் நேற்று மாலை பொதுத்தேர்வு முடிவு இன்று (வெள்ளிக்கிழமை) காலை வெளியிட இருப்பதாக அறிவித்திருந்தது.

இந்நிலையில் பிளஸ்2 தேர்வு முடிவுகள் தற்போது வெளியிடப்பட்டுள்ளது. பிளஸ்2 பொதுத்தேர்வில் 95.20 சதவீத மாணவர்கள் தேர்ச்சி அடைந்துள்ளதாக பள்ளிக் கல்வித்துறை தெரிவித்துள்ளது. இதன்படி மாணவர்கள் 93.19 சதவீதமும், மாணவிகள் 97 சதவீதமும் தேர்ச்சி அடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் மொத்தம் 7.53 லட்சம் மாணவர்கள் (95.20 சதவீதம்) தேர்ச்சி பெற்றுள்ளனர். இதில் மாணவிகள் 4,06,167 பேர் (97 சதவீதம்). தேர்ச்சி பெற்ற மாணவர்கள் 3, 47, 527 பேர் (93.19 சதவீதம்)

இந்த முறையும் வழக்கம்போலவே தேர்ச்சி விகிதத்தில் மாணவிகளே அதிகம் இடம்பெற்றுள்ளனர். மாணவர்களை விட 3.81 சதவீதம் அதிகமாக மாணவிகள் தேர்ச்சி பெற்றிருக்கின்றனர்.

இந்த தேர்வில் பங்கெடுத்த மேல்நிலைப் பள்ளிகளின் எண்ணிக்கை 7,536. இதில் 100 சதவீதம் தேர்ச்சி பெற்ற பள்ளிகள் 2,639. இதில் அரசுப் பள்ளிகள் 489.

தேர்ச்சி விகிதத்தில் ஈரோடு, சிவகங்கை, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்கள் முதல் 3 இடங்களைப் பெற்றுள்ளன.

ஈரோடு 98.87 சதவீதம்

சிவகங்கை 98.05 சதவீதம்

கன்னியாகுமர் 97.63 சதவீதம்

நெல்லை 97.54 சதவீதம்

திருச்சி 97 சதவீதம்

## மாநில அளவில் இரண்டாம் இடம்... மாவட்டத்தில் முதலிடம் !

## சாதனை படைத்து கல்வியில் சிகரம் தொட்ட திசையன்விளை வி.எஸ்.ஆர். மெட்ரிக் பள்ளி



திசையன்விளை மே.9

நடைபெற்று முடிந்த 2025 26 கல்வி ஆண்டிற்கான மெட்ரிக் பிளஸ்டு பொதுத்தேர்வு முடிவுகளில், திருநெல்வேலி மாவட்டம் திசையன்விளை வி.எஸ். ஆர். மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி மாநில அளவில் மாபெரும் சாதனை படைத்துள்ளது.

**மாநில அளவிலான சாதனை:**

இப்பள்ளியில் பயின்ற மாணவி காவியா, பொதுத்தேர்வில் மிகச் சிறந்த மதிப்பெண்களைப் பெற்று, மாநில அளவில் இரண்டாம் இடத்தையும் மற்றும் திருநெல்வேலி மாவட்ட அளவில் முதலிடத்தையும் பிடித்து வரலாற்றுச் சாதனை புரிந்துள்ளார். திசையன்விளையைச் சேர்ந்த முத்து குட்டி ரத்தின திலகம் தம்பதியினரின் மகளான காவியாவின் இந்தச் சாதனை, ஒட்டுமொத்த மாவட்டத்திற்கும் பெருமை சேர்த்துள்ளது.

**பள்ளி தாளாளர் வாழ்த்து:**

சாதனை படைத்த மாணவி காவியாவை, வி.எஸ்.ஆர். கல்வி நிறுவனங்களின் தாளாளர் வி.எஸ்.ஆர். ஜெகதீஷ் நேரில் அழைத்து, பொன்னாடை போர்த்தி வாழ்த்துக்களைத் தெரிவித்தார். மேலும், பள்ளியின் துணை முதல்வர் விஜயா தினகர், ஆசிரியப் பெருமக்கள் மற்றும் மாணவமாணவிகள் என அனைவரும் காவியாவைக் கொண்டாடி மகிழ்ந்தனர்.

**பள்ளியின் பெருமை:**

நெல்லை மாவட்டத்தின் தென்கோடியில் அமைந்துள்ள திசையன்விளை வி.எஸ்.ஆர். மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, ஆரம்பம் முதலே தரமான கல்விக்கும், ஒழுக்கத்திற்கும் பெயர் பெற்ற நிறுவனமாகும்.

**தொடர் சாதனைகள்:**

ஒவ்வொரு ஆண்டும் பொதுத்தேர்வுகளில் 100 சதவீத தேர்ச்சியைப் பெறுவது மட்டுமின்றி, மாநில மற்றும் மாவட்ட தரவரிசைப் பட்டியலில் இப்பள்ளி மாணவர்கள் தொடர்ந்து இடம்பிடித்து வருகின்றனர்.

**சிறந்த கட்டமைப்பு:**

கிராமப்புற மாணவர்களுக்கும் உலகத்தரம் வாய்ந்த கல்வியையும், தனித்திறன் பயிற்சிகளையும் வழங்கி, அவர்களைச் சாதனையாளர்களாக மாற்றுவதில் இப்பள்ளி ஒரு 'சாதனைத் தொழிற்சாலையாகத்' திகழ்கிறது.

**ஆசிரியர்களின் அர்ப்பணிப்பு:**

மாணவர்களின் தனித்திறனைக் கண்டறிந்து, அவர்களை ஊக்கப்படுத்தும் வி.எஸ்.ஆர். கல்வி நிறுவனங்களின் தாளாளர் வி.எஸ்.ஆர். ஜெகதீஷ், பள்ளியின் துணை முதல்வர் விஜயா தினகர், ஆசிரியப் பெருமக்களின் அயராத உழைப்பே இத்தகைய இமாலய வெற்றிக்குக் காரணம் எனப் பெற்றோர்கள் புகழாரம் சூட்டுகின்றனர்.

## விஜய் ஆட்சி அமைக்க இடதுசாரிகள் ஆதரவு: 118க்கு இன்னும் 2 மட்டுமே தேவை!



சென்னை: மே.9-

தவெக ஆட்சியமைக்க இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஆதரவளித்த நிலையில், தற்போது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் ஆதரவு தெரிவித்துள்ளது.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் 108 இடங்களில் வெற்றி பெற்று தவெக தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்தது, அக்கட்சிக்கு 5 உறுப்பினர்களை கொண்ட காங்கிரஸ் கட்சி ஆதரவளித்த நிலையில், விஜய் ஆட்சியமைக்க மேலும் 6 பேரின் ஆதரவு தேவைப்பட்டது. ஆட்சியமைக்க அழைக்கக் கோரி ஆளுநரிடம் தவெக தலைவர் விஜய் கோரிக்கை வைத்த நிலையில், பெரும்பான்மைக்கான பட்டியலை அளிக்குமாறு அவர் கேட்டிருந்தார். இந்த நிலையில் விசிக, சிபிஐ மற்றும் சிபிஎம் கட்சிகளிடம் தவெக ஆதரவு கேட்டிருந்தது.

இதனையடுத்து இன்று ஆலோசனை நடத்திய இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, தவெக ஆட்சியமைப்பதற்கு நிபந்தனையற்ற ஆதரவு வழங்குவதாக அறிவித்தது. அதனைத் தொடர்ந்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் தவெகவுக்கு ஆதரவு வழங்குவதாக அறிவித்துள்ளது. இரு கட்சிகளுமே ஆதரவுக் கடிதங்களை அளித்துள்ளன.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் கீழ்வேளூரில் போட்டியிட்ட லதா மற்றும் பத்மநாதபுரத்தில் போட்டியிட்ட செல்லசாமி ஆகியோர் வெற்றி பெற்றனர்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் திருத்துறைப்பூண்டியில் போட்டியிட்ட மாரிமுத்து மற்றும் தளியில் போட்டியிட்ட ராமச்சந்திரன் ஆகியோர் வெற்றி பெற்றனர்.

இடதுசாரிகள் ஆதரவு தெரிவித்த காரணத்தால் தவெகவின் ஆதரவு 116 ஆக உயர்ந்துள்ளது. இந்த நிலையில், தவெக ஆட்சியமைக்க மேலும் 2 உறுப்பினர்களின் ஆதரவு மட்டுமே தேவை. இந்தச் சூழலில், 2 உறுப்பினர்களை கொண்ட விசிக இன்று மாலை தங்களின் முடிவை அறிவிப்பதாக கூறியுள்ளது குறிப்பிடத்தக்கது.

# உதவி ஆய்வாளரை சுட்டு விட்டு தப்பியோட முயற்சி: ரவுடியை துப்பாக்கியால் சுட்டுப் பிடித்த போலீஸார்






தூத்துக்குடி:மே.9-

தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூர் அருகே போலீஸாரை நாட்டு துப்பாக்கியால் சுட்டு விட்டு தப்பியோட முயன்ற பிரபல ரவுடியை, போலீஸார் துப்பாக்கியால் சுட்டு பிடித்தனர்.தூத்துக்குடி மினி சகாயபுரம் பகுதியைச் சேர்ந்தவர் ஆர்க் என்ற மரிய அந்தோனி (35). இவர் மீது தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள பல்வேறு காவல் நிலையங்களில் கொலை, கொலை முயற்சி, கொள்ளை உள்ளிட்ட சுமார் 30 வழக்குகள் உள்ளன. இவரை போலீஸார் தீவிரமாக தேடி வந்தனர்.இந்நிலையில் திருச்செந்தூர் அருகே உள்ள சோனகன்விளை காணியாளன்புதூரில் ஒரு வீட்டில் மரிய அந்தோனி தங்கி இருப்பதாக போலீஸாருக்கு தகவல் கிடைத்தது. உதவி ஆய்வாளர் ராஜ பிரபு தலைமையிலான தனிப்படை போலீஸார் நேற்று மதியம் காணியாளன்புதூரில் உள்ள வீட்டில் இருந்த மரிய அந்தோனியை பிடிக்க முயன்றனர்.அப்போது, அவர் தன்னிடம் இருந்த நாட்டு துப்பாக்கியால் உதவி ஆய்வாளர் ராஜ பிரபுவை சுட்டு விட்டு தப்பித்து ஓட முயன்றுள்ளார். உடனே உஷாரான உதவி ஆய்வாளர் தன்னிடம் இருந்த துப்பாக்கியால் சுட்டதில் மரிய அந்தோனியின் வலது மார்புக்கும் வயிற்றுக்கும் இடைப்பட்ட பகுதியில் குண்டு பாய்ந்தது.இதனால் காயமடைந்த அவர் சம்பவ இடத்திலேயே மயங்கி விழுந்தார். போலீஸார் அவரை உடனடியாக திருச்செந்தூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அங்கு முதலுதவி அளிக்கப்பட்ட பின்னர் மேல் சிகிச்சைக்காக தூத்துக்குடி அரசு மருத்துவமனையில் அவர் அனுமதிக்கப்பட்டுள்ளார். அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

மரிய அந்தோனி நாட்டு துப்பாக்கியால் சுட்டதில் காயமடைந்த உதவி ஆய்வாளர் ராஜ பிரபுவும் தூத்துக்குடி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார். அவரை எஸ்.பி.மதன் பார்த்து நலம் விசாரித்தார்.பின்னர் செய்தியாளர்களிடம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தெரிவித்ததாவது: மரிய அந்தோனி மீது சுமார் 30 வழக்குகள் உள்ளன. தூத்துக்குடி தென்பாகம் காவல் நிலையம் மீது வெடிகுண்டு வீசிய வழக்கில் அவர் கைது செய்யப்படாமல் தலைமறைவாக இருந்தார். இந்த வழக்கு தொடர்பாக அவரை பிடிக்க முயன்ற போது தான் நாட்டு துப்பாக்கியால் எஸ்ஐ ராஜபிரபுவை மரிய அந்தோணி சுட்டு விட்டு தப்பியோட முயன்றார்.இதை தொடர்ந்து தனது உயிரை பாதுகாக்க சட்ட விதிகளுக்கு உட்பட்டு எஸ்ஐ தனது துப்பாக்கியால் ஒரு ரவுண்டு சுட்டுள்ளார். இது தொடர்பாக திருச்செந்தூர் தாலுகா போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர் என்றார்.

# ஆபரேஷன் சிந்தூர் நினைவாக 500 கிலோ எடையில் ஐம்பொன் நினைவுத் தூண்: கும்பகோணம் பகுதியில் தயாராகிறது




கும்பகோணம்:மே.9-

கும்பகோணம் வட்டம் மூப்பக்கோவிலில், 500 கிலோ எடையில் ஐம்பொன்னால் ஆன ஆபரேஷன் சிந்தூர் நினைவுத் தூண் வடிவமைக்கப்பட்டு வருகிறது.

காஷ்மீரின் பஹல்காமில் கடந்த ஆண்டு ஏப்ரல் 22ம் தேதி சுற்றுலா பயணிகள் மீது பாகிஸ்தான் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 26 பேர் உயிரிழந்தனர். இதற்கு பதிலடியாக இந்திய ராணுவம் கடந்தாண்டு மே மாதம் 7ம் தேதி ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையை தொடங்கியது. இதில், பாகிஸ்தான் மீது இந்திய ராணுவம் அதிரடி தாக்குதலை நடத்தி, அங்கிருந்த தீவிரவாதிகளின் முகாம் மற்றும் பாகிஸ்தான் ராணுவ நிலைகள் சிலவற்றை அழித்தது. இதன் முதலாம் ஆண்டு தினம் நேற்று நினைவு கூரப்பட்டது.இதற்கிடையே, ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையை வெற்றிகரமாக நடத்திக் காட்டிய இந்திய ராணுவத்தை கவுரவப்படுத்தும் வகையில், கடலூரில் இயங்கி வரும் ஷைன் இந்தியா சோல்ஜர்ஸ் வெல்ஃபர் அசோசியேஷன் சார்பில் ஐம்பொன்னால் ஆன நினைவுத் தூண் வடிவமைக்க முடிவெடுக்கப்பட்டது.அதன்படி, கும்பகோணம் வட்டம் மூப்பக்கோவிலில் ஸ்தபதி குமார் தலைமையிலான குழுவினர் ரூ.10 லட்சம் மதிப்பில் 500 கிலோ எடையில் 8 அடி உயரத்தில் ஐம்பொன்னால் ஆன நினைவுத் தூண் வடிவமைக்கும் பணியை கடந்த 2 மாதங்களாக மேற்கொண்டு வருகின்றனர்.இந்த நினைவுத் தூணின் அடித்தளம் 2 அடி விட்டமும், ஒன்றரை அடி அகலமும், அதன் மேல் ஒரு அடி பத்மமும் கொண்டதாக இருக்கும். அதற்கு மேல் மையத் தூண் 2 அடியிலும், குங்குமச் சிமிழ் இரண்டரை அடியிலும், தலைப்பாகத்தில் குங்குமம் வர்ணம் ஒரு அடியிலும் அமைக்கப்படுகிறது. மையத் தூணில் முப்படைகளின் இலச்சினைகள் பொருத்தப்படும்.ராணுவத்தில் ஒப்படைக்கப்படும்: இப்பணிகள் நிறைவடைந்த பிறகு பிரத்யேக வாகனத்தின் மூலமாக டெல்லிக்கு கொண்டு சென்று இந்திய ராணுவ தலைமையகத்தில் ஒப்படைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை கடலூர் ஷைன் இந்தியா சோல்ஜர்ஸ் வெல்ஃபர் அசோசியேஷன் தொண்டு நிறுவனத் தலைவர் மில்ட்ரி பாபு, ஆலோசகர் சத்தியநாராயணன், ஒருங்கிணைப்பாளர் அரவிந்தன் மற்றும் நிர்வாகிகள், முன்னாள் படைவீரர்கள் நலச் சங்கத்தினர் செய்து வருகின்றனர். முன்னதாக, முதலாமாண்டு நினைவு தினத்தையொட்டி நேற்று மாதிரி தூணுக்கு மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது.

# நாடாளுமன்றத்தில் திமுக இருக்கைகளை மாற்றி தரக் கோரி சபாநாயகருக்கு கனிமொழி கடிதம்



புதுடெல்லி:மே.9-

காங்கிரஸ் கட்சியுடனான கூட்டணி முறிந்த நிலையில், மக்களவையில் திமுகவுக்கான இருக்கைகளை மாற்றி வழங்க வேண்டும் என்று மக்களவை சபாநாயகருக்கு திமுக நாடாளுமன்றக் குழுத் தலைவர் கனிமொழி எம்.பி. கடிதம் எழுதியுள்ளார்.

தமிழகத்தின் பிரதான கட்சிகளான திமுக, அதிமுகவை பின்னுக்குத் தள்ளி தமிழக வெற்றிக் கழகம் தனித்து நின்று 108 இடங்களில் வெற்றி பெற்றது. ஆனால் தனி மெஜாரிட்டி கிடைக்கவில்லை. காங்கிரஸ் தனது 5 எம்எல்ஏக்களின் ஆதரவை அளித்திருக்கிறது. நீண்ட காலம் திமுக கூட்டணியில் அங்கம் வகித்து வந்த காங்கிரஸ் இப்போது தவெகவுடன் கைகோத்துள்ளது.

இந்நிலையில், திமுக நாடாளுமன்றக் குழுத் தலைவர் கனிமொழி, மக்களவை சபாநாயகருக்கு எழுதியுள்ள கடிதத்தில் 'திமுக கூட்டணியில் இருந்து காங்கிரஸ் வெளியேறிய நிலையில், மக்களவையில் திமுக எம்.பி.க்களுக்கு அருகே காங்கிரஸ் அமரும் இருக்கையை மாற்றம் செய்ய வேண்டும். தற்போதைய இருக்கை அமைப்பில் காங்கிரஸுடன் இணைந்து அமருவது பொருத்தமாக இருக்காது.

மேலும், திமுக நாடாளுமன்ற உறுப்பினர்கள் மக்களவையில் தங்களது பொறுப்புகளை திறம்பட மேற்கொள்ளும் வகையில், தனியான இருக்கை வசதியை ஒதுக்கிட தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். இந்த கோரிக்கையை பரிசீலித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்று அவர் தெரிவித்துள்ளார்.




# "ஆட்சி அமைக்கும் முயற்சியில் உள்ள எந்த கட்சிக்கும் பாஜக ஆதரவு இல்லை" நயினார் நாகேந்திரன்

சென்னை: மே.9-

"ஆட்சி அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ள எந்தவொரு கட்சிக்கும் நாங்கள் வாக்களிக்க மாட்டோம்" என தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தனது எக்ஸ் தளத்தில், "தமிழ்நாட்டு மக்களின் நலன் மற்றும் முன்னேற்றத்திற்காக தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ள பாரதிய ஜனதா கட்சி அதே நோக்கத்துடன் சட்டமன்ற தேர்தலிலும் களம் கண்டது. இருப்பினும் தேர்தல் முடிவுகளை கட்சியானது, மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்கிறது.

மேலும் தமிழ்நாட்டில் ஆட்சி அமைப்பதற்கான எந்தவொரு வாய்ப்பினையும் அதிகாரத்தையும் மக்கள் பாரதிய ஜனதா கட்சிக்கு இந்த தேர்தலில் வழங்கவில்லை என்று கருதுகிறோம். தமிழ்நாட்டு மக்களின் விருப்பத்தையும், தேர்தல் முடிவுகளையும் நாங்கள் உளமார மதிக்கிறோம். எனவே தமிழக பாரதிய ஜனதா கட்சியானது, தமிழ்நாட்டில் புதிய அரசை அமைப்பதற்கான எந்தவொரு முயற்சியிலும் தன்னை இணைத்துக்கொள்ள விரும்பவில்லை.

ஆட்சி அமைக்கும் எவ்வித முயற்சியிலும் கட்சியானது எவ்வித நேரடிப் பங்களிப்பையும் மேற்கொள்ள விரும்பவில்லை. மேலும், ஆட்சி அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ள எந்தவொரு கட்சிக்கும் நாங்கள் வாக்களிக்க மாட்டோம் என்பதையும் மக்களுக்கு தெரிவித்துக் கொள்கிறோம்" இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# "அதிமுக மீண்டும் ஆட்சிக்கு வரும்; எடப்பாடி பழனிசாமி நல்லாட்சி தருவார்" தம்பிதுரை



சென்னை:மே.9-

தமிழகத்தில் அதிமுக மீண்டும் ஆட்சிக்கு வரும்; எடப்பாடி பழனிசாமி நல்லாட்சி தருவார் என்று தெரிவித்துள்ள அக்கட்சியின் மூத்த தலைவரும் மாநிலங்களவை எம்.பி.யுமான தம்பிதுரை, இது தொடர்பாக கட்சி பல்வேறு கட்ட ஆலோசனைகளில் ஈடுபட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக செய்தி நிறுவனம் ஒன்றுக்கு பேட்டி அளித்துள்ள அவர், "ஏராளமான ஆலோசனைகள் நடைபெற்று வருகின்றன. இப்போது என்னால் எதையும் உறுதியாக சொல்ல இயலாது. அனைத்தும் உரிய நேரத்தில் நடக்கும். நல்லதே நடக்கும் என்று நாங்கள் நம்புகிறோம். எனது கட்சி, எனது தலைவர் மீண்டும் (ஆட்சிக்கு) வருவார்"

திமுகவுடன் அதிமுக கூட்டணி அமைக்க இருக்கிறதா என்ற கேள்விக்கு, "இல்லை, இல்லை. இப்போதைக்கு நான் என்ன சொல்ல முடியும் என்றால், மக்களின் உணர்வுப்பூர்வமான ஆதரவு அதிமுகவுக்கு இருக்கிறது. அதிமுக ஆட்சிக்கு வர வேண்டும் என்று மக்கள் விரும்புகிறார்கள். எங்கள் கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி மக்களைச் சந்திக்கும்போதெல்லாம், அவர்கள் தங்கள் உணர்வுப்பூர்வ ஆதரவை வெளிப்படுத்துகிறார்கள். எனவே, கடவுளின் அருளால் அது உரிய காலத்தில் நடக்கும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

அதிமுக திமுக இடையே பேச்சுவார்த்தை நடைபெறுவதாகக் கூறப்படுவது உண்மையா என்ற கேள்விக்கு, அது குறித்து தலைவர்கள் சொல்வார்கள். தமிழகத்தில் நல்லாட்சி வரும். எங்கள் கழக பொதுச்செயலாளர் நல்ல ஒரு ஆட்சியைத் தருவார் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது" என தெரிவித்தார்.

தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இருந்து அதிமுக வெளியேறுகிறதா என்ற செய்தியாளர்களின் கேள்விக்கு பதில் அளிக்காமல் தம்பிதுரை சென்றுவிட்டார்.

அதற்கு வாய்ப்பு இருப்பதாக நான் கருதவில்லை... இதனிடையே, திமுக அதிமுக கூட்டணி ஏற்பட வாய்ப்பு இருக்கிறதா என்ற கேள்விக்கு, "அதற்கு வாய்ப்பு இருப்பதாக நான் கருதவில்லை என்று திமுக செய்தித் தொடர்பாளர் டி.கே.எஸ்.இளங்கோவன் தெரிவித்துள்ளார். செய்தி நிறுவனம் ஒன்றுக்கு பேட்டியளித்த அவர், அது சாத்தியம் என்று நான் நினைக்கவில்லை. ஏனெனில், தமிழக அரசியலில் திமுகவும் அதிமுகவும் மிகப் பெரிய எதிரிகள். திமுக அதிமுகவுக்கு இடையில் சிலர் வருவார்கள், போவார்கள். எனவே, திமுகவும் அதிமுகவும் கூட்டணி அமைப்பதற்கான வாய்ப்பு இருப்பதாக நான் கருதவில்லை" என தெரிவித்தார்.

நேற்றைய திமுக எம்எல்ஏக்கள் கூட்டத்தில் மு.க. ஸ்டாலின் எந்த ஒரு முடிவையும் எடுக்க அதிகாரம் வழங்கப்பட்டதை எப்படிப் பார்க்கிறீர்கள் என்ற கேள்விக்கு, "ஏனெனில் அவர்களால் அமைச்சரவையை அமைக்க முடியாது. ஒரு எதிர்க்கட்சி என்ற முறையில் எவ்வாறு நாங்கள் செயல்பட வேண்டும், சட்டப்பேரவையில் எவ்வாறு செயல்பட வேண்டும் என்பது குறித்து அவர் ஆலோசனை வழங்குவார். அவ்வளவுதான்" என தெரிவித்துள்ளார்.

# "விஜய்யை வீழ்த்த ஒன்றிணையும் வாழ்நாள் எதிரிகள்" மாணிக்கம் தாகூர் கடும் தாக்கு



சென்னை:மே.9-

விஜய் என்ற மனிதனை வீழ்த்த வாழ்நாள் எதிரிகளான இரண்டு திராவிட கட்சிகள் ஒன்றிணைந்துள்ளதாக காங்கிரஸ் எம்.பி. மாணிக்கம் தாகூர் விமர்சித்துள்ளார்.

இது குறித்து அவர் தனது எக்ஸ் பக்கத்தில், "இரண்டு திராவிட கட்சிகள். வாழ்நாள் எதிரிகள். ஒரே இரவில் ஒன்றானார்கள். தமிழகத்திற்காக இல்லை. மதச்சார்பின்மைக்காக இல்லை. ஒரே ஒரு மனிதனை நிறுத்த, விஜய்யை வீழ்த்த நடக்கும் முயற்சியை காங்கிரஸ் தெளிவாக பார்த்தது, வெளியேறியது. ஆர்எஸ்எஸ் / பாஜகவின் பிடிமுடன் சேர்ந்து கொண்ட உங்களை மதச்சார்பற்றவர் என்று சொல்ல முடியாது. 'நிலையான அரசு' என்பது இரண்டு பயந்த கட்சிகள் தங்கள் அதிகாரத்தை காக்கும் அரசியல் மொழி. காங்கிரஸ் சரியாகவே வெளியேறியது. திமுக இன்று தன் முகமூடியை கழற்றுமா? யார் துரோகி?" என்று பதிவிட்டுள்ளார்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் 108 இடங்களில் வெற்றி பெற்ற தவெக தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்துள்ளது. எனினும், ஆட்சி அமைக்க 118 இடங்கள் தேவை என்ற சூழலில், காங்கிரஸின் ஆதரவை விஜய் கோரினார். இதன் தொடர்ச்சியாக, 5 காங்கிரஸ் எம்எல்ஏக்களும் விஜய்யிடம் தங்கள் ஆதரவுக் கடிதத்தை 6ம் தேதி வழங்கினர். இது திமுகவினர் மத்தியில் கடும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது. காங்கிரஸ் முதுகில் குத்திவிட்டதாக பலரும் தங்கள் ஆதங்கத்தை வெளிப்படுத்தினர்.

சென்னை அண்ணா அறிவாலயத்தில் திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நேற்று நடைபெற்ற சட்டமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில்" கூட்டணிக் கட்சித் தொண்டர்களின் உழைப்பால் பெற்ற வெற்றியைப் பணயம் வைத்து மாற்று அணிக்கு மூன்று நாட்களுக்குள் காங்கிரஸ் கட்சி மாறியதன் மூலம் அக்கட்சி தனது பழைய குணத்தை மாற்றிக் கொள்ளவில்லை என்பதையே எடுத்துக் காட்டுகிறது" என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது



■ புதுச்சேரி சட்டமன்ற தேர்தலில் வெற்றி பெற்றதற்காக DGP ஷாலினி சிங், மண்ணாடிப்பட்டு தொகுதி வெற்றி பெற்ற வேட்பாளர் A.நமச்சிவாயம் அவர்களை சந்தித்து வாழ்த்து தெரிவித்தனர்.

# கூடுவாஞ்சேரி - மூதாட்டியை கொலை செய்து ஏரியில் வீசியவர் கைது

கூடுவாஞ்சேரி: மே.09-

சிங்கப்பெருமாள் கோவில் சின்ன செங்குன்றம், வண்டிக்காரன் தெருவை சேர்ந்த திலீபன் (35), தனியார் நிறுவன ஊழியர். இவர் கூடுவாஞ்சேரி நந்தீஸ்வரர் குடியிருப்பில் வசிக்கும் தன் பெரியம்மா சரஸ்வதியை (65) காணவில்லை என கடந்த ஏப். 29ம் தேதி கூடுவாஞ்சேரி காவல் நிலையத்தில் புகார் அளித்தார்.போலீஸார் அந்த பகுதியில் உள்ள சிசிடிவி பதிவுகளை ஆய்வு செய்தனர். இதில், சரஸ்வதியின் வீட்டுக்கு அருகே வசிக்கும் வினோத்குமார் (35), கொடைக்கானலில் வசிக்கும் தன் நண்பர் தீபன் சக்கரவர்த்தியுடன் சேர்ந்து சரஸ்வதியை கொலை செய்து பின்னர் தலைமறைவாகி இருப்பது தெரிந்தது.இதையடுத்து கொலையாளிகளின் மொபைல் போன் சிக்னலை வைத்து கொடைக்கானல் விரைந்த போலீஸார் அங்கு தீபன் சக்கரவர்த்தியை கைது செய்தனர். விசாரணையில், வினோத்குமாருடன் சேர்ந்து சரஸ்வதியின் மூக்கு, வாயை பொத்தி கொன்று அவர் அணிந்திருந்த 7 பவுன் நகையை கொள்ளையடித்ததை தீபன் போலீஸாரிடம் தெரிவித்தார்.மேலும், சரஸ்வதியின் உடலை காரில் எடுத்து சென்று திருவள்ளூர், வெள்ளவேடு, தாத்ரீஸ்வரர் கோயில் அருகே உள்ள ஏரியில் வீசியதாகவும் தெரிவித்தார். இதையடுத்து சரஸ்வதியின் உடலை மீட்ட போலீஸார் பிரேத பரிசோதனைக்காக செங்கை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.பின்னர் தீபன் மீது வழக்கு பதிவு செய்த போலீஸார் அவரை செங்கல்பட்டு நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர். தலைமறைவாக உள்ள வினோத்குமாரை, போலீஸார் தேடி வருகின்றனர்.

# தேர்தல் தோல்விக்கு பொறுப்பேற்று புதுச்சேரி காங். தலைவர் வைத்திலிங்கம் ராஜினாமா



புதுச்சேரி:மே.09-

சட்டப்பேரவைத் தேர்தலில் தோல்வி அடைந்ததால், புதுச்சேரி மாநில காங்கிரஸ் தலைவர் வைத்திலிங்கம் தனது பதவியை ராஜினாமா செய்வதாக, கட்சித் தலைமைக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

நடந்துமுடிந்த சட்டப்பேரவைத் தேர்தலின் போது, புதுவையில் இண்டியா கூட்டணியில் யார் தலைமை வகிப்பது என தெடங்கி காங்கிரஸ் திமுக இடையே கடும் மோதல் ஏற்பட்டது. இரு கட்சிகளுக்கும் இடையே நல்ல உடன்பாடு ஏற்படாமலேயே, கூட்டணி ஒப்பந்தம் கையெழுத்தானது. கூட்டணி ஒப்பந்தத்தை மீறி, திமுக, விசிக, இந்திய கம்யூனிஸ்ட் போட்டியிட்ட இடங்களில் காங்கிரஸ் போட்டி வேட்பாளர்களை நிறுத்தியது. இது மேலும் அதிருப்திக்கு ஆளாக்கி, தேர்தல் முடிவில் எதிரொலித்தது.

இவ்வாறு கூட்டணி ஒப்பந்தத்தை மீறி, கூட்டணி கட்சிகளின் தொகுதிகளில் தங்கள் வேட்பாளர்களை நிறுத்தியதை 'நட்பு போட்டி' என்ற வார்த்தையை பயன்படுத்தி காங்கிரஸ் தரப்பில் விளக்கம் அளிக்கப்பட்டது.

இவ்வாறான நட்பு போட்டியில் ஈடுபட்டு, காங்கிரஸ் மொத்தம் உள்ள 30 தொகுதிகளில் 22 தெகுதிகளில் போட்டியிட்டது. ஆனால் ஒரு தெகுதியில் மட்டுமே வென்று படுதோல்வி அடைந்தது. குறிப்பாக, தற்போது புதுச்சேரியின் மக்களவை உறுப்பினராக இருக்கும் மாநில காங்கிரஸ் தலைவர் வைத்திலிங்கம் தட்டாஞ்சாவடி தொகுதியில் முதல்வர் ரங்கசாமியை எதிர்த்து போட்டியிட்டார்.

அந்தத் தொகுதியில் போட்டியிட இண்டியா கூட்டணியில், இந்திய கம்யூனிஸ்ட் அனைத்து வேலைகளையும் செய்த நிலையில், வைத்திலிங்கம் இவ்வாறு போட்டியிடுவதற்கு கடும் விமர்சனம் எழுந்தது. அவர், தேர்தலில் தோற்று, நான்காம் இடத்தை பிடித்தார். டெபாசிட் கூட வாங்கவில்லை. பிற தொகுதிகளிலும் ஏற்பட்ட தோல்வியால், புதுச்சேரி காங்கிரஸில் வைத்திலிங்கத்துக்கு எதிர்ப்பு கிளம்பியது.'வைத்திலிங்கம் மாநிலத் தலைவர் பதவியை வகிக்க கூடாது. விலக வேண்டும்' என்று கூறி புதுச்சேரி காங்கிரஸ் நிர்வாகிகள், கட்சி அலுவலகத்தை முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த நிலையில் சட்டப்பேரவைத் தேர்தல் தோல்விக்கு தார்மீக பொறுப்பு ஏற்று, மாநில தலைவர் பதவியை ராஜினாமா செய்வதாக அகில இந்திய தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, ராகுல் காந்தி எம்.பி. ஆகியோருக்கு வைத்திலிங்கம் நேற்று கடிதம் அனுப்பியுள்ளார்.

# அமெரிக்காவின் 14 அம்ச திட்டத்தை பரிசீலிப்பதாக ஈரான் தகவல்



டெஹ்ரான்:மே.9-

அமெரிக்காவின் 14 அம்ச அமைதி திட்டத்தை பரிசீலித்து வருகிறோம் என்று ஈரான் வெளியுறவுத் துறை தெரிவித்துள்ளது.

அமெரிக்கா, ஈரான் இடையே கடந்த பிப்ரவரி 28ம் தேதி முதல் போர் நடைபெற்று வந்தது. கடந்த ஏப்ரல் 8ம் தேதி இரு தரப்பு இடையே போர் நிறுத்தம் அமலுக்கு வந்தது. இந்த சூழலில் போருக்கு நிரந்தர முற்றுப்புள்ளி வைக்க 14 அம்ச அமைதி திட்டத்தை அமெரிக்கா முன்மொழிந்து உள்ளது.அடுத்த 15 ஆண்டுகளுக்கு யுரேனியத்தை செறிவூட்டக்கூடாது. தற்போது கையிருப்பில் உள்ள செறிவூட்டப்பட்ட யுரேனியத்தை அமெரிக்காவிடம் வழங்க வேண்டும். ஹார்முஸ் ஜலசந்தியை முழுமையாக திறக்க வேண்டும். இந்த நடவடிக்கைகளுக்கு பதிலாக அமெரிக்காவின் பொருளாதார தடையால் முடக்கப்பட்ட ஈரானின் சொத்துகள், நிதி ஆதாரங்கள் விடுவிக்கப்படும் என்பன உள்ளிட்ட 14 அம்ச திட்டத்தை அமெரிக்கா முன்மொழிந்திருக்கிறது.

இது குறித்து ஈரான் வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் நேற்று கூறும்போது, "அமெரிக்காவின் அமைதி திட்டத்தை தீவிரமாக பரிசீலித்து வருகிறோம். எங்களது முடிவை பாகிஸ்தான் மூலம் அமெரிக்காவுக்கு தெரிவிப்போம்" என்றார்.ஈரான் வெளியுறவு அமைச்சர் அப்பாஸ் அராக்சி கூறும்போது, "அமெரிக்கா உடனான ராஜ்ஜிய ரீதியிலான பேச்சுவார்த்தையில் ஈரானின் கை ஓங்கியிருக்கிறது. நியாயமான அமைதி ஒப்பந்தத்தை மட்டுமே ஏற்றுக் கொள்வோம்" என்றார்.

ஈரான் அதிபர் மசூத் பெசெஷ்கியன் நேற்று முன்தினம் பிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மெக்ரானிடம் தொலைபேசியில் பேசினார். அப்போது பெசெஷ்கியன் கூறும்போது, "சர்வதேச சட்ட விதிகளுக்கு உட்பட்ட அமைதி பேச்சுவார்த்தை மூலம் போருக்கு முற்றுப்புள்ளி வைக்க ஈரான் விரும்புகிறது. அதே நேரம் ஈரான் மக்களின் உரிமைகளை ஒருபோதும் விட்டுக் கொடுக்க மாட்டோம்" என்றார்.அதிபர் ட்ரம்ப் கருத்து: அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் நேற்று கூறும்போது, "ஈரானுடன் ஆக்கப்பூர்வமான பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது. அந்த நாட்டுடன் சுமுக உடன்பாடு எட்டப்பட வாய்ப்பிருக்கிறது.

48 மணி நேரத்துக்குள் ஈரான் முடிவு எடுக்க வேண்டும். ஒருவேளை அமைதி உடன்பாடு எட்டப்படவில்லை என்றால் ஈரான் மீது மிகப்பெரிய தாக்குதல் நடத்தப்படும். ஈரான் நரகமாக மாறும்" என்று தெரிவித்தார்.

# இந்தியர்களைக் கவரும் தாய்லாந்து டெஸ்டினேஷன் விசா: தொடர்ந்து 180 நாட்கள் தங்கலாம்!




பாங்காக்: மே.9-

பல ஆண்டுகளாக நீண்ட விடுமுறை, ரிமோட் ஒர்க், ஆரோக்கியம் சார்ந்த தங்குமிடங்கள் மற்றும் பேக்பேக்கிங் சாகசங்களுக்குத் தாய்லாந்து மிகவும் பிரபலமான நாடுகளில் ஒன்றாக இருந்து வருகிறது.இப்போது, நவீன காலப் பயணிகளுக்காகவே வடிவமைக்கப்பட்டது போன்ற ஒரு விசா மூலம், அந்த நாடு தனது நற்பெயரை இன்னும் வலுவாக முன்னெடுத்துச் செல்கிறது. 'டெஸ்டினேஷன் தாய்லாந்து விசா' என்று அழைக்கப்படும் இது சுமார் ரூ.25 ஆயிரத்துக்கு கிடைக்கிறது.இந்த 5 ஆண்டு கால மல்டிபிள் என்ட்ரி விசா, ஃப்ரீலான்ஸர்கள், ரிமோட் பணியாளர்கள், தாய் சமையல் வகுப்புகள், ஆரோக்கியத் திட்டங்கள் அல்லது கலாச்சாரக் கற்றல் போன்ற செயல்பாடுகளுக்காக தாய்லாந்து செல்லும் நபர்களை இலக்காகக் கொண்டுள்ளது. எளிமையான சொற்களில் கூறுவதென்றால், நீண்ட காலம் தங்கி உள்ளூர் அளவில் செலவு செய்து, வழக்கமான சுற்றுலாப் பயணிகளைத் தாண்டி அந்த நாட்டை அனுபவிக்க விரும்பும் மக்களை ஈர்ப்பதற்கான தாய்லாந்தின் முயற்சி தான் இது.தென் கிழக்கு ஆசியாவில் நீண்ட காலத் தங்குமிடம், எங்கிருந்து வேண்டுமானாலும் வேலை செய்யும் வாழ்க்கை முறை மற்றும் மலிவான வாழ்க்கைச் செலவு ஆகியவற்றைத் தேடும் இந்தியர்களிடையே, இந்த விசா தற்போது இணையத்தில் ஒரு முக்கிய பேசுபொருளாக மாறி வருகிறது. டெஸ்டினேஷன் தாய்லாந்து விசா என்பது ஒரு நீண்ட கால மல்டிபிள் என்ட்ரி விசா ஆகும். இது தகுதியுள்ள வெளிநாட்டினர் 5 ஆண்டுகள் வரை தாய்லாந்தில் தங்க அனுமதிக்கிறது.சாதாரண சுற்றுலா விசா போல் அல்லாமல், இது ஒரு குறுகிய கால விடுமுறைக்காக மட்டும் வருபவர்களுக்காக உருவாக்கப்பட்டது அல்ல. ரிமோட் முறையில் வேலை செய்யும் போது அல்லது ஒரு திறமையைக் கற்றுக் கொள்ளும் போது அல்லது தாய்லாந்து "சாஃப்ட் பவர்" செயல்பாடுகள் என்று அழைக்கும் பயிற்சிகளில் ஈடுபடும் போது, நீண்ட காலம் அங்கு வசிக்க விரும்புபவர்களுக்காக இது உருவாக்கப்பட்டுள்ளது.இந்த விசா பயணிகளின் ஒவ்வொரு வருகையின் போதும் 180 நாட்கள் வரை தாய்லாந்தில் தங்க அனுமதிக்கிறது. அந்தத் தங்குமிடத்தை மேலும் 180 நாட்களுக்கு நீட்டிக்கவும் முடியும், அதாவது ஒரு வருகையை கிட்டத்தட்ட ஒரு வருடம் வரை நீடிக்க வாய்ப்புள்ளது.

# தவெக ஆட்சியமைக்க தமிழக ஆளுநர் அழைத்திருக்க வேண்டும்: எம்.ஏ.பேபி



புதுடெல்லி:மே.9-

தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்துள்ள கட்சியே (தவெக) ஆட்சி அமைக்கும் வாய்ப்பைப் பெற வேண்டும் என்றும் இவ்விஷயத்தில் தங்கள் கட்சியின் முடிவு இன்னும் சில மணி நேரங்களில் உறுதிப்படுத்தப்படும் என்றும் சிபிஎம் பொதுச் செயலாளர் எம்.ஏ.பேபி தெரிவித்துள்ளார்.டெல்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், "தமிழக தேர்தல் முடிவுகள் எந்த ஒரு கட்சிக்கும் தனிப்பெரும்பான்மை பலத்தை வழங்கவில்லை. அதே நேரத்தில், விஜய்யின் தவெக தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்துள்ளது. பெரும்பான்மைக்குத் தேவையான இடங்களைவிட சில இடங்கள் மட்டுமே அக்கட்சிக்கு குறைவாக உள்ளது. மரபுப்படி பார்த்தால், தனிப்பெரும் கட்சியாகத் திகழும் அக்கட்சியை ஆளுநர் ஆட்சி அமைக்க அழைத்திருக்க வேண்டும். சட்டமன்றத்தில், தனது பெரும்பான்மையை நிரூபிக்க அக்கட்சிக்கு கால அவகாசம் அளித்திருக்க வேண்டும். ஆனால், தமிழக ஆளுநர் ஏன் அவ்வாறு செய்யவில்லை என்பது வியப்பையும் கவலையையும் அளிக்கிறது.இத்தகைய ஒரு சூழலில், ஜனநாயக நடைமுறையில் எவ்வித சிக்கலும் ஏற்படாமல் தடுக்கும் பொருட்டு நாங்கள் (சிபிஎம்) எங்களின் நட்புக் கட்சிகளான சிபிஐ மற்றும் விசிக ஆகியவற்றுடன் கலந்தாலோசித்து ஒரு முடிவை எடுத்துள்ளோம். தமிழகத்தில் செயற்கையாக உருவாக்கப்பட்டிருக்கும் தேக்க நிலையை முடிவுக்குக் கொண்டு வரும் நோக்கிலும், தமிழக மக்கள் வழங்கி இருக்கும் ஒட்டுமொத்த தீர்ப்பை மதித்துப் போற்றும் நோக்கிலும் சில மணி நேரங்களில் நாங்கள் எங்கள் முடிவை எடுக்க திட்டமிட்டுள்ளோம்.

தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்துள்ள கட்சியே ஆட்சி அமைக்கும் வாய்ப்பைப் பெற வேண்டும். அதற்குத் தேவையான நடவடிக்கைகள் குறித்து மூன்று கட்சிகளும் தற்போது கலந்தாலோசித்து வருகின்றன. இன்னும் சில மணி நேரங்களுக்கும் நாங்கள் எங்கள் முடிவை அறிவிப்போம்" என தெரிவித்தார்.

# டெல்லியில் போலி மருந்துகளை விற்பனை செய்த 4 பேர் கைது

புதுடெல்லி:மே.9-

புற்று நோய், கல்லீரல் நோய் மற்றும் இதர உயிர் காக்கும் சிகிச்சைகளுக்கான மருந்துகளை போலியாக தயார் செய்து நாடு முழுவதும் விற்ற 4 பேர் கும்பலை டெல்லியில் போலீஸார் கைது செய்துள்ளனர்.

இவர்களிடமிருந்து ரூ.10 கோடி மதிப்பிலான போலி மருந்துகள் மற்றும் அதன் தயாரிப்புக்கான உபகரணங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. புற்று நோய், கல்லீரல் நோய் மற்றும் இதர உயிர் காக்கும் சிகிச்சைகளுக்கான மருந்துகளின் விலை மிக அதிகம். இதை ஒரு கும்பல் போலியாக தயாரித்து நாடு முழுவதும் விற்பனை செய்துள்ளது.

இதற்கு மூளையாக செயல்பட்டவர் மணிப்பூரைச் சேர்ந்த மனோஜ் குமார் மிஸ்ரா. இவர் முதலில் மருத்துவர்கள் பயன்படுத்தும் கையுறை மற்றும் முகக்கவசம் ஆகியவற்றை விற்கும் தொழிலில் ஈடுபட்டார். இத்தொழில் கடந்த 2022ம் ஆண்டு நஷ்டம் அடைந்தது.

இதையடுத்து இவர் போலி மருந்துகளை தயாரித்து விற்கும் தொழிலில் ஈடுபட்டார். இதற்காக யுனைடெல் ஃபார்மா என்ற மருந்து நிறுவனத்தை தொடங்கியுள்ளார். அதன் மூலம் உயிர்காக்கும் சிகிச்சைகளுக்கு பயன்படுத்தப்படும் பிரபல நிறுவனங்களின் மருந்துகளை போலியாக தயாரித்துள்ளார். அவை ஒரிஜினல் போல் தோற்றமளிப்பதற்காக, அதிநவீன பேக்கேஜிங் இயந்திரங்களை வாங்கி பயன்படுத்தி மருந்து வியாபாரிகளையும், நோயாளிகளையும் ஏமாற்றியுள்ளார்.

போலீஸார் நடத்திய சோதனையில், ரூ.10 கோடி மதிப்புள்ள மருந்து, மாத்திரைகள் மற்றும் பேக்கேஜ் இயந்திரங்களை கைப்பற்றியுள்ளனர். போலி மருந்துகள் நாடு முழுவதும் எங்கெங்கு விற்பனை செய்யப்பட்டன என்ற விவரங்களை போலீஸார் கண்டறிந்து வருகின்றனர். போலி மருந்து தயாரிப்பில் ஈடுபட்ட மனோஜ் குமார் மிஸ்ரா உள்ளிட்ட 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# குற்றாலம் பிரதான அருவியில் குளிப்பதற்காக பழமையான சிலைகளை சேதப்படுத்துவதை அனுமதிக்க முடியாது: ஐகோர்ட்



மதுரை: மே.9-

குற்றாலம் பிரதான அருவியில் குளிப்பதற்காக அங்குள்ள பழமையான சிலைகளை சேதப்படுத்துவதை அனுமதிக்க முடியாது என, உயர் நீதிமன்ற நீதிபதிகள் தெரிவித்தனர்.

மதுரை எழுமலையைச் சேர்ந்த ராமர் ரவிக்குமார், உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனு: குற்றால அருவிகள் வரலாற்று சிறப்புமிக்கவை. அருவிகளில் பழமையான சிலைகள் உள்ளன. தற்போது, குற்றால அருவிப் பகுதிகளில் சீரமைப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்தப் பணியின் போது, அங்குள்ள கற்சிலைகள் பொதுப்பணித் துறையால் சேதப்படுத்தப்பட்டுள்ளன. விநாயகர் உட்பட பல்வேறு சிலைகள் அங்கிருந்து அகற்றப்பட்டுள்ளன.

இந்த செயல்பாடு மத நம்பிக்கையை புண்படுத்தும் வகையில் அமைந்துள்ளது. எனவே, குற்றாலம் பிரதான அருவி பகுதியில் உள்ள சிலைகளை சீரமைத்தல் என்ற பெயரில் அகற்றவோ, மாற்றவோ கூடாது என்றும், பழங்கால சிலைகளை சேதப்படுத்தியவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவும் உத்தரவிட வேண்டும். இவ்வாறு மனுவில் கோரப்பட்டிருந்தது.

இந்த மனு நீதிபதிகள் வேல்முருகன், குமரப்பன் அமர்வில் நேற்று விசாரணைக்கு வந்தது. அரசு தரப்பில், குற்றாலம் பிரதான அருவியில் நடைபாதை விரிவுப்படுத்தும் பணி நடந்து வருகிறது. இதற்கு அப்பகுதியில் உள்ள 2 கற்சிலைகள் எடுக்கப்பட்டுள்ளன. பணிகள் முடிந்ததும் அந்த சிலைகள் அதே இடத்தில் நிறுவப்படும்.

குற்றாலத்தில் இன்னும் 10 நாட்களில் சீசன் தொடங்கவுள்ளது. சீசன் தொடங்கினால் குற்றலாத்துக்கு பயணிகள் அதிகளவில் வருவர். இதனால், சீரமைப்புப் பணிகளை விரைவில் முடிக்க வேண்டும். அதற்கு, நீதிமன்றம் அனுமதி வழங்க வேண்டும் என கேட்டு கொள்ளப்பட்டது.

அதற்கு நீதிபதிகள், குளிப்பதற்காக 2 ஆயிரம் ஆண்டு பழமையான சின்னங்களை சேதப்படுத்துவதை அனுமதிக்க முடியாது. அப்படி குளிப்பதாக இருந்தால் குளியல் அறையில் போய் குளிக்கலாம். சீரமைப்புப் பணியை தொடரக்கூடாது. ஜூன் முதல் வாரம் வரை தற்போதைய நிலை தொடர வேண்டும் என உத்தரவிட்டனர்.

# முதல்வராக விஜய்க்கு பதவி பிரமாணம் செய்து வைக்கக் கோரி ஆளுநர் மாளிகை வெளியே தவெகவினர் போராட்டம்



சென்னை:மே.9-

முதல்வராக விஜய்க்கு பதவி பிரமாணம் செய்து வைக்க கோரி, ஆளுநர் மாளிகை வெளியே பதாகை ஏந்தி தவெகவினர் போராட்டம் நடத்தினர். தமிழக சட்டப்பேரவை தேர்தலில் தமிழக வெற்றிக் கழகம் 108 இடங்களை கைப்பற்றி தனிப் பெரும் கட்சியாக உருவெடுத்துள்ளது. ஆனால், ஆட்சி அமைக்க போதிய இடங்கள் தவெகவுக்கு கிடைக்கவில்லை.எனினும், 108 எம்எல்ஏக்கள் மற்றும் காங்கிரஸ் 5 எம்எல்ஏக்களுடன் சேர்ந்து ஆட்சி அமைக்க ஆளுநரிடம், விஜய் உரிமை கோரினார். ஆனால், ஆட்சி அமைப்பதற்கான 118 எம்எல்ஏக்களின் பட்டியலை ஆளுநர் கேட்டதாக கூறப்படுகிறது. இதனால், முதல்வர் பதவி ஏற்பு விழா திட்டமிட்டபடி நடைபெறவில்லை. மேலும், திமுக, அதிமுக தனித்தனியாக எம்எல்ஏக்கள் கூட்டத்தை நடத்தி முடித்துள்ளது.

இதற்கிடையே, திமுக கூட்டணியில் வெற்றி பெற்ற இரு கம்யூனிஸ்ட் மற்றும் விடுதலை சிறுத்தைகளின் ஆதரவை தவெக கோரி உள்ளது.இந்நிலையில், தமிழக முதல்வராக விஜய்க்கு ஆளுநர் பதவிப் பிரமாணம் செய்து வைக்க வேண்டும் என தவெகவினர் கிண்டியில் உள்ள ஆளுநர் மாளிகை வெளியே பதாகைகளை ஏந்தி போராட்டம் நடத்தினர்

# மதுக்கரை வனப்பகுதியில் மின்கம்பியை துதிக்கையால் பிடித்து இழுத்ததில் யானை உயிரிழப்பு!

கோவை:மே.9-

கோவை அருகே மதுக்கரை வனப்பகுதியில் மின்மாற்றியில் இருந்த மின்கம்பியை துதிக்கையால் பிடித்து இழுத்த யானை மின்சாரம் தாக்கி உயிரிழந்த சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. வனத்துறையினர் நடத்திய விசாரணையில், உயிரிழந்தது சுமார் 25 வயது மதிக்கத்தக்க ஆண் யானை என்பது குறிப்பிடத்தக்கது. வனப்பகுதியை ஒட்டியுள்ள தோட்ட பகுதிகளில் உணவு மற்றும் தண்ணீர் தேடி யானைகள் அடிக்கடி வருவதாக கூறப்படுகிறது.

இந்த நிலையில், யானை மின் மாற்றி அருகே சென்றபோது அங்கிருந்த கம்பியை துதிக்கையால் பிடித்து இழுத்ததாகவும், அதில் மின்சாரம் தாக்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததாகவும் வனத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இந்த தகவல் அறிந்த வந்த வனத்துறையினர் மற்றும் கால்நடை மருத்துவ குழுவினர் சம்பவ இடத்துக்கு சென்று யானையின் உடலை கைப்பற்றி பரிசோதனை செய்தனர். மேலும், வனப்பகுதியை ஒட்டிய தோட்டங்களுக்கான மின்சார கட்டமைப்புகளை யானைகள் அணுகாத வகையில் பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் என்று மின்வாரிய அதிகாரிகளிடம் வனத்துறை வலியுறுத்தப்பட்டுள்ளது

# பிளஸ் 2 தேர்வு முடிவுகள்: மு.க.ஸ்டாலின், இபிஎஸ் உள்ளிட்ட தலைவர்கள் வாழ்த்து

சென்னை: மே.9-

பன்னிரண்டாம் வகுப்புப் பொதுத் தேர்வு முடிவுகள் வெளியாகியுள்ள நிலையில், திமுக தலைவர் ஸ்டாலின், அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி, முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஷ் ஆகியோர் மாணவர்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

திமுக தலைவர் மு.க.ஸ்டாலின்: பன்னிரண்டாம் வகுப்புப் பொதுத் தேர்வில் வெற்றி பெற்றுள்ள அனைத்து மாணவ மாணவிகளுக்கும் வாழ்த்துகள்.95.2% மாணவர்கள் தேர்ச்சி பெற்றுள்ளனர். அன்பில் மகேஷ் தொடர்புகொண்டு, சென்ற ஆண்டைவிட அதிகமான மாணவர்கள் தேர்ச்சி பெற்றுள்ளனர் என்று பெருமிதத்தோடு கூறியபோது, பெருமகிழ்ச்சி அடைந்தேன்.

மாணவச் செல்வங்கள், வாழ்வில் மேன்மையடைய மேற்படிப்புகளில் மேலும் கவனம் செலுத்திப் படியுங்கள். இத்தேர்வில் இம்முறை தேர்ச்சி பெறத் தவறியவர்கள் மனம் தளர வேண்டாம்; உங்களுக்கான அடுத்தடுத்த வாய்ப்புகளைப் பயன்படுத்திக்கொண்டு முன்னேறுங்கள். கல்வியே வாழ்வின் வெற்றிக்குத் துணை.

அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி: இன்று +2 தேர்வு முடிவுகள் வெளியாகியுள்ள நிலையில், தேர்ச்சி பெற்ற மாணவச் செல்வங்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துகள். உங்கள் கனவுகளை நோக்கிய உயர்கல்விப் பயணத்தை மிகுந்த கவனத்தோடு தேர்ந்தெடுங்கள். தங்கள் பெற்றோர் மற்றும் அனுபவமிக்க ஆசிரியர்களின் ஆலோசனைகளைக் கேட்டுக்கொண்டு, சரியான பாதையைத் தேர்ந்தெடுங்கள்.

அதேபோல், இந்த தேர்வில் தேர்ச்சி அடையத் தவறிய மாணவர்கள் துவண்டுவிட வேண்டாம். வாழ்க்கை எந்த கதவையும் எப்போது வேண்டுமானாலும் திறக்கலாம். அதனால், நன்கு படித்து, துணைத் தேர்வுகள் வாயிலாக தேர்ச்சி அடையுங்கள் என உங்களுக்கும் எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஷ்: மு.க.ஸ்டாலினின் வழிகாட்டுதலின்படி, மாணவர்களின் தேர்ச்சி விகிதத்தை அதிகரிக்க தொடர் முயற்சிகளை மேற்கொண்டதன் பலனாக +2 தேர்ச்சி விகிதத்தில் 0.17% உயர்வு. அனைத்து மாவட்டங்களுக்கும் நேரடியாக சென்று ஷிலிகிஷி அறிக்கையை முன்னிறுத்தி, தலைமையாசிரியர்களைச் சந்தித்து ஆலோசனை மேற்கொண்டோம். அதன் தொடர்ச்சியாக அவர்கள் முன்னெடுத்த முயற்சிகளுக்கும் நெஞ்சார்ந்த நன்றி. மாணவச் செல்வங்கள் ஒன்றை புரிந்துகொள்ள வேண்டும். இந்தத் தேர்வு முடிவுகள் என்பது உங்களுக்கானது மட்டுமல்ல. எங்களுக்குமானதுதான். மறுவாய்ப்பு தேவைப்படும் மாணவர்கள் உடனடியாக துணைத் தேர்வெழுதி வெற்றி பெற வாழ்த்துகள்.

# திண்டுக்கல்லில் சாகும் வரை உண்ணாவிரதம் தொடங்கிய தவெக ஆதரவு பெண்கள்: இருவர் கைது



திண்டுக்கல்:மே.9-

தவெக தலைவர் விஜய்க்கு முதல்வராக பதவியேற்பு நடத்த வலியுறுத்தி, திண்டுக்கல்லில் பெண்கள் கையில் பதாகை ஏந்தி சாகும் வரை உண்ணாவிரதப் போராடத்தில் ஈடுபட்டனர்.

இவர்களை போலீஸார் கைது செய்தனர். திண்டுக்கல் தெற்குரதவீதி, எருமைக்காரத் தெருவை சேர்ந்தவர் சரண்யா. இவர் தவெக செயற்குழு உறுப்பினராக உள்ளார். இவர், நேற்று காலை திடீரென திண்டுக்கல்லில் திருச்சி, பழநி ரோடு சந்திப்பு கல்லறைத்தோட்டம் அருகே 'சாகும் வரை உண்ணாவிரதம்' என்ற பதாகையை ஏந்தி, கழுத்தில் தவெக துண்டு அணிந்து அமர்ந்தார்.

இவருடன் இவரது தோழி வளர்மதி, வளர்மதியின் 15 வயது மகள் ஆகியோரும் கையில் பதாகையை ஏந்தி அமர்ந்தனர்.ஜனநாயக முறைப்படி, தமிழக வெற்றிக் கழகத் தலைவர் விஜய்யை ஆட்சி அமைக்க ஆளுநர் உடனடியாக அழைக்க வேண்டும்.

சட்டமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிக்க 15 நாட்கள் கால அவகாசம் வழங்க வேண்டும் ஆகிய கோரிக்கைகளை வலியுறுத்தி சாகும்வரை உண்ணாவிரதம் இருப்பதாக தெரிவித்தனர்.

தகவல் அறிந்த திண்டுக்கல் டிஎஸ்பி கார்த்திக், உண்ணாவிரதத்தை துவக்கிய சரண்யாவிடம் பேச்சுவார்த்தை நடத்தினர்.

'அனுமதியின்றி செயல்பட்டுள்ளீர்கள். அரசியல் அமைப்பு சட்டப்படி ஆளுனர் செயல்படுவார்' என உண்ணாவிதரம் இருந்தவர்களிடம் போலீஸார் விளக்கி பேச்சுவார்த்தை நடத்தினர். இருந்தபோதும் உண்ணாவிரதத்தை கைவிட பெண்கள் மறுத்தனர். இதையடுத்து சரண்யா, வளர்மதி ஆகிய இருவரையும் விசாரணைக்காக திண்டுக்கல் நகர் வடக்கு காவல்நிலையத்திற்கு போலீஸார் அழைத்துச்சென்று கைது செய்தனர். தவெக தலைவர் விஜய்க்கு பதவிப்பிரமானம் செய்ய வலியுறுத்தி பெண்கள் திடீரென சாகும்வரை உண்ணாவிரதத்தை திண்டுக்கல்லில் துவக்கியதால் பரபரப்பு ஏற்பட்டது. தகவல் அறிந்து தவெக கட்சியை சேர்ந்த நிர்வாகிகள் வரும்முன் போலீஸார் இரு பெண்களையும் உண்ணாவிரதம் இருந்த பகுதியில் இருந்து அப்புறப்படுத்தினர்

# கல்வியில் சிகரம் தொடும் தென்காசி! 16 அரசுப் பள்ளிகள் உட்பட 74 பள்ளிகள் 100% தேர்ச்சி




தென்காசி மே. 09-202526 ஆம் கல்வி ஆண்டிற்கான மேல்நிலை இரண்டாம் ஆண்டு (பிளஸ்டு) பொதுத்தேர்வு முடிவுகள் நேற்று வெளியாகின. இதில் தென்காசி மாவட்டம் 97.18 சதவீத தேர்ச்சியைப் பெற்று மாநில அளவில் 8வது இடத்தைப் பிடித்து வரலாற்றுச் சாதனை படைத்துள்ளது.தென்காசி மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பின்படி, இவ்வாண்டு பொதுத்தேர்வு முடிவுகள் குறித்துக் கூறப்பட்டுள்ளதாவது: மாவட்டம் முழுவதும் 152 மேல்நிலைப் பள்ளிகளைச் சேர்ந்த 7,408 மாணவர்கள் மற்றும் 8,358 மாணவிகள் என மொத்தம் 15,766 பேர் தேர்வு எழுதினர். இதில் 7,085 மாணவர்கள் மற்றும் 8,237 மாணவிகள் என மொத்தம் 15,322 பேர் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

ஒட்டுமொத்தமாக 97.18% தேர்ச்சி விகிதத்தைப் பதிவு செய்து, மாநில அளவில் தென்காசி மாவட்டம் 8ம் இடத்தை எட்டிப் பிடித்துள்ளது.

*சாதனை படைத்த பள்ளிகள்:*மாவட்டத்தில் உள்ள 152 பள்ளிகளில், 16 அரசுப் பள்ளிகள் உட்பட மொத்தம் 74 பள்ளிகள் 100 சதவீத தேர்ச்சியை (Full Result) பெற்று அசத்தியுள்ளன. குறிப்பாக அரசுப் பள்ளிகளின் இந்தச் சாதனை மாவட்டக் கல்வி நிர்வாகத்தின் சிறப்பான செயல்பாட்டிற்குச் சான்றாக அமைந்துள்ளது.

# 10 மாணவர்கள் 550க்கு மேல் மதிப்பெண் சங்கரன்கோவில் ஸ்ரீ கோமதி அம்பாள் மெட்ரிக் பள்ளி பிளஸ்டூவில் சாதனை

சங்கரன்கோவில் மே 09-நடைபெற்று முடிந்த பிளஸ்டு பொதுத்தேர்வு முடிவுகளில், சங்கரன்கோவில் ஸ்ரீ கோமதி அம்பாள் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி மாணவர்கள் மிகச்சிறந்த மதிப்பெண்களைப் பெற்று பள்ளிக்குப் பெருமை சேர்த்துள்ளனர். பள்ளி அளவில் முதல் மூன்று இடங்களைப் பிடித்த மாணவிகளின் விவரம் வருமாறு: முதலிடம்: மாணவி ஷி. வெண்ணிலா 600க்கு 582 மதிப்பெண்கள் பெற்று சாதனை படைத்துள்ளார். இவர் வேதியியலில் 100க்கு 100 மதிப்பெண்கள் பெற்று




அசத்தியுள்ளார். (தமிழ் 99, ஆங்கிலம் 93, இயற்பியல் 96, கணிதம் 98, உயிரியல் 96).

இரண்டாமிடம்: மாணவி றி. சக்தி 600க்கு 576 மதிப்பெண்களும், அதே மதிப்பெண்ணை (576/600) மாணவி ஷி. குருஷிவானிமஹிமா அவர்களும் பெற்று இரண்டாம் இடத்தைப் பகிர்ந்து கொண்டனர்.

மூன்றாமிடம்: மாணவி ஷி. ரித்திகா 600க்கு 574 மதிப்பெண்கள் பெற்று மூன்றாம் இடம் பிடித்தார்.

பள்ளியில் 35 மாணவர்கள் 500 மதிப்பெண்களுக்கு மேலும், 10 மாணவர்கள் 550 மதிப்பெண்களுக்கு மேலும் பெற்றுத் தேர்ச்சி பெற்றுள்ளனர்.


வேதியியல் பாடத்தில் மாணவி வெண்ணிலா முழு மதிப்பெண் (100/100) பெற்றுள்ளார். வெற்றி பெற்று பள்ளிக்குப் பெருமை சேர்த்த மாணவ மாணவிகளைப் பள்ளி நிர்வாக இயக்குநர் ஷி.ரி. ராஜேஸ் கண்ணா மற்றும் பள்ளி முதல்வர் ந. பழனிச்செல்வம் ஆகியோர் நேரில் பாராட்டி வாழ்த்துகளைத் தெரிவித்தனர். மேலும், இந்த வெற்றிக்கு உறுதுணையாக இருந்த ஆசிரிய ஆசிரியைகள் மற்றும் பெற்றோர்களுக்கும் பள்ளி நிர்வாகம் சார்பில் பாராட்டுகள் தெரிவிக்கப்பட்டது.




■ உலக ரெட் கிராஸ் தினத்தை முன்னிட்டு, மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன்குமார், சர்வதேச ரெட் கிராஸ் இயக்கத்தின் நிறுவனர் ஜூன் ஹென்றி டுணான்ட் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.



■ தேனி மாவட்டம் பெரியகுளம் வட்டம், லட்சுமிபுரம் அரசு மேல்நிலைப் பள்ளியில் சமூக நலத்துறை சார்பில் பள்ளி மாணவ மாணவர்களுக்கான கோடை கால பயிற்சி முகாமினை மாவட்ட ஆட்சித் தலைவர் ரஞ்ஜீத் சிங் தொடங்கிவைத்தார்.



# நீலாங்கரையில் விஜய் வீட்டுக்கான போலீஸ் பாதுகாப்பு வாபஸ்

சென்னை:மே 09-

நீலாங்கரையில் உள்ள விஜய் வீட்டுக்கான போலீஸ் பாதுகாப்பு விலக்கிக்கொள்ளப்பட்டுள்ளது. தமிழக சட்டப் பேரவைத் தேர்தலில் 108 இடங்களைக் கைப்பற்றி தவெக தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்துள்ளது.

இதையடுத்து, முதல்வராக விஜய் பதவியேற்க உள்ளார். இதற்கான முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. இது ஒருபுறம் இருக்க, தேர்தல் முடிவு வெளியான நேரத்திலேயே விஜய்யின் நீலாங்கரை வீடு மற்றும் பனையூரில் உள்ள தவெக தலைமை அலுவலகத்தில் போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டது.

500க்கும் மேற்பட்ட போலீஸார் நிறுத்தப்பட்டனர். விஜய்யின் வீட்டின் முன்பு வெடிகுண்டுகளை கண்டறியும் மெட்டல் டிடெக்டர் இயந்திரம் வைக்கப்பட்டது. அதோடு மட்டும் அல்லாமல் முதல்வருக்கென்று உள்ள பிரத்யேக பாதுகாப்பு (கான்வாய்) விஜய்க்கு வழக்கப்பட்டது.

மேலும் சென்னை போலீஸாருடன் ஒருங்கிணைந்து மத்திய ஆயுதப்படை போலீஸாரும் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டனர். வீடு மற்றும் அலுவலகத்தை சுற்றிலும் கூடுதல் பேரிகார்டுகள் போடப்பட்டன.

இந்நிலையில் விஜய் வீடு மற்றும் அலுவலகத்துக்கு போடப்பட்டிருந்த போலீஸ் பாதுகாப்பு மற்றும் முதல்வருக்கான பிரத்யேக கான்வாய் ஆகியவை விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளன.

வழக்கமாக செல்லும் ரோந்து பணிகளில் மட்டும் போலீஸார் ஈடுபட்டுள்ளனர். விஜய் கேட்டுக் கொண்டதால் பாதுகாப்பு விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளதாக அக்கட்சியின் துணை பொதுச் செயலாளர் சி.டி.நிர்மல் குமார் விளக்கம் அளித்துள்ளார். விஜய் பதவி ஏற்பதில் தாமதம் மற்றும் சிக்கல் நிலவுவதால் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.




# தவெகவை ஆட்சிக்கு வர விடாமல் தடுக்கும் தமிழக கவர்னர், பாஜகவை கண்டித்து காங்கிரஸ் கட்சியினர் ஆர்ப்பாட்டம்

மதுரை.மே. 09-மதுரை ஜான்சிராணி பூங்கா முன்புஅகில இந்திய காங்கிரஸ் கட்சியின் சார்பில் நடந்துள்ளது முடிந்த தமிழக சட்டசபை தேர்தலில் தமிழக வெற்றிக் கழக கட்சி 108 இடங்களை பிடித்து பெரும்பான்மை பெற்றுள்ளது இருப்பினும் பெரும்பான்மையை நிரூபிக்க 118 இடங்கள் தேவை என்பதால் ஐந்து இடங்களில் வெற்றி பெற்ற காங்கிரஸ் கட்சி ஆதரவு தந்துள்ளது எனினும் இன்னும் ஆறு இடங்கள் தேவை என்பதால் ஆட்சி அமைக்க இழுபறி நீடித்துக் கொண்டிருக்கிறது.

மேலும் தமிழக வெற்றி கழகத்தை ஆட்சி அமைக்க விடாமல் தடுத்து வரும் தமிழக கவர்னரையும் பாஜகவையும் கண்டித்து தமிழகம் முழுவதும் மாவட்ட தலை நகரங்களில் அகில இந்திய காங்கிரஸ் கட்சி சார்பாக மாவட்ட தலைநகரங்களில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது அதன் ஒரு பகுதியாக மதுரை மாநகர் பகுதியில் மாநகர் மாவட்ட தலைவர் நல்லமணி தலைமையில் காங்கிரஸ் கட்சியினர் நூற்றுக்கும் மேற்பட்டோர் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# பாக் நீரிணை கடலை நீந்தி கடந்து பெங்களூரு ஐடி தம்பதி சாதனை

ராமேசுவரம்:மே.9-தலைமன்னார் தனுஷ்கோடி இடையேயான பாக் நீரிணை கடல் பகுதியை 10 மணி 45 நிமிடங்களில் நீந்தி கடந்து பெங்களூருவை சேர்ந்த தம்பதி சாதனை படைத்தனர்.கர்நாடக மாநிலம் பெங்களூருவைச் சேர்ந்த தானிஸ் அப்டி (30), அவரது மனைவி விஷாலி பிரசித் (30). இருவரும் தகவல் தொழில்நுட்ப பொறியாளர்களாக பணிபுரிகின்றனர். பெங்களூரு அகாடமியில் நீச்சல் பயிற்சி பெற்று பல போட்டி களில் வெற்றி பெற்றுள்ளனர்.



இருவரும் இலங்கையில் உள்ள தலைமன்னாரில் இருந்து இந்தியாவில் உள்ள தனுஷ்கோடி வரையிலான பாக் நீரிணை கடல் பகுதியை நீந்தி கடப்பதற்காக இந்திய வெளியுறவுத்துறை, இலங்கை தூதரகம் மற்றும் பாதுகாப்புத்துறை அமைச்சகத்திடம் அனுமதி பெற்றனர்.

இதையடுத்து, ராமேசுவரம் மீன்பிடித் துறைமுகத்தில் இருந்து 2 விசைப்படகுகளில் பயிற்சியாளர், மருத்துவர், மீனவர்கள் உள்ளிட்ட 20 பேர் கொண்ட குழுவினருடன் தலைமன்னாருக்கு புறப்பட்டுச் சென்றனர்.

தலைமன்னாரில் கடந்த புதன்கிழமை அதிகாலை 4.30 மணிக்கு நீந்த தொடங்கிய தானிஸ் அப்டி, விஷாலி பிரசித் பிற்பகல் 3.15 மணியளவில் தனுஷ்கோடி அரிச்சல் முனையை வந்தடைந்தனர். பாக் நீரிணை கடல் பகுதியை 10 மணி நேரம் 45 நிமிடங்களில் நீந்தி கடந்த முதல் தம்பதி என்ற சாதனையை படைத்துள்ளனர். இருவருக்கும் மரைன் மற்றும் பாதுகாப்பு படை அதிகாரிகள் உற்சாக வரவேற்பு அளித்து வாழ்த்து தெரிவித்தனர்.

# பீகாரில் அதிர்ச்சி சம்பவம் மதிய உணவில் கிடந்த பாம்பு குட்டி..250க்கும் மேற்பட்ட குழந்தைகளுக்கு உடல்நல பாதிப்பு

லக்னோ:மே.9-பீகாரில் மதிய உணவு சாப்பிட்ட ஏராளமான குழந்தைகளுக்கு உடல்நலக்குறைவு ஏற்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி இருக்கிறது. பீகாரின் சஹர்சா பகுதியில் மஹிஷி வட்டாரத்திற்குட்பட்ட பாலுஹாவில் அமைந்துள்ள அரசு நடுநிலைப் பள்ளியில் இந்த சம்பவம் நடைபெற்றுள்ளது. அப்பள்ளி மாணவர்களுக்கு வழங்கப்பட மதிய உணவில் ஒரு சிறிய பாம்பு கண்டெடுக்கப்பட்டது. நேற்று மதியம் பாம்பு கிடந்த உணவை உட்கொண்ட 250க்கும் மேற்பட்ட மாணவர்கள் உடல்நலக்குறைவால் பாதிக்கப்பட்டனர். பாதிக்கப்பட்ட மாணவர்கள் வயிற்று வலி, வாந்தி, தலைச்சுற்றல் போன்ற அறிகுறிகளால் அவதோ அடைந்தனர். இது குறிப்பிட்ட பள்ளி வளாகத்திற்குள் பெரும் பரபரப்பையும் குழப்பத்தையும் ஏற்படுத்தியது. உடல்நலக்குறைவால் பாதிக்கப்பட்ட மாணவர்கள் அனைவரும் உடனடியாக மஹிஷி சுகாதார மையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு, அங்கு அவர்களுக்கு மருத்துவர்களின் மேற்பார்வையில் சிகிச்சை அளிக்கப்பட்டது. ஒரே நேரத்தில் இவ்வளவு அதிகமான மாணவர்கள் சுகாதார மையத்திற்கு அழைத்து வரப்பட்டதால், அங்கு மக்கள் கூட்டம் திரண்டது.பள்ளியில் கொடுக்கப்பட்ட அரிசி மற்றும் பருப்பு கலந்த உணவை சாப்பிட்டதும் சிறிது நேரத்திலேயே கடுமையான வயிற்று வலி, வாந்தி மற்றும் தலைச்சுற்றல் உள்ளிட்ட பல அறிகுறிகள் ஏற்பட்டதாக பாதிக்கப்பட்ட குழந்தைகள் கூறி இருக்கிறார்கள். மேலும் அந்த உணவைச் சாப்பிட்ட பிறகு பல குழந்தைகளின் உடல்நலம் மோசமடையத் தொடங்கியதாக தெரிகிறது.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து, பெற்றோர்களிடையே கடும் கொந்தளிப்பு ஏற்பட்டது. கிராம மக்களும் பெற்றோர்களும் பள்ளியில் திரண்டு, உணவின் தரம் குன்றியிருந்ததைக் குறித்தும், இதில் சம்பந்தப்பட்ட அலட்சியத்தைக் குறித்தும் முழக்கமிட்டு, தீவிரமான போராட்டங்களை முன்னெடுத்தனர். பள்ளியில் பருப்பு சேமித்து வைக்கப்பட்டிருந்த பாத்திரத்தில் ஒரு சிறிய பாம்பு குட்டி கிடந்ததாக மாணவர்களின் பெற்றோர் குற்றம் சாட்டியுள்ளனர். இதனிடையே பள்ளி நிர்வாகம் சார்பாக உணவின் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு ஆய்வக சோதனைக்கு அனுப்பப்பட்டுள்ளன. மாவட்ட ஆட்சியர் தீபேஷ் குமார் இந்த சம்பவம் குறித்து விரிவான விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளார். பாதிக்கப்பட்ட மாணவர்கள் சஹர்சா சதர் மருத்துவமனை மற்றும் மகிஷி பொது சுகாதார மையத்தில் அனுமதிக்கப்பட்டனர். தற்போது பெரும்பாலான மாணவர்களின் உடல்நிலை சீராக இருப்பதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்

# அச்சிறுப்பாக்கம் அருகே 5 குடிசை வீடு எரிந்து நாசம்: தொண்டு நிறுவனம் நிவாரண உதவி

மதுராந்தகம்:மே.9-அச்சிறுப்பாக்கம் அருகே இருளர்களின் 5 குடிசை வீடுகள் தீப்பற்றி எரிந்து சேதமானது. இதில் பாதிக்கப்பட்ட குடும்பத்துக்கு தொண்டு நிறுவனம் நிவாரண உதவி வழங்கியது. செங்கல்பட்டு மாவட்டம் அச்சிறுப்பாக்கம் அடுத்த அம்மணம்பாக்கம் ஊராட்சியில் இருளர் குடும்பத்தினர் வசித்து வருகின்றனர். இந்நிலையில் நேற்று மதியம் திடீரென குடிசை வீட்டில் தீப்பிடித்து எரிந்தது. அப்போது காற்று வீசியதால் பக்கத்து குடிசைகளுக்கும் தீ பரவி, 5 குடிசை வீடுகளும் கொழுந்துவிட்டு எரிய துவங்கியது.




இதை பார்த்து அதிர்ச்சியடைந்த பகுதி மக்கள் உடனடியாக அச்சிறுப்பாக்கம் தீயணைப்புத்துறையினருக்கு தகவல் தெரிவித்தனர். அதன்படி தீயணைப்பு வாகனங்களில் வந்த வீரர்கள், தண்ணீர் பீய்ச்சியடித்து தீயை கட்டுக்குள் கொண்டு வந்தனர். இருந்தபோதிலும் 5 குடிசை வீடுகளும் எரிந்து சாம்பலானது. வீடுகளில் இருந்த துணிமணிகள், பாத்திரங்கள், பணம் உள்ளிட்டவை எரிந்து நாசமானது. இதனால் இருளர்களின் வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டு வீடுகள் இல்லாமல் தவித்து வருகின்றனர்.

இதையறிந்து சம்பவ இடத்துக்கு வந்த செய்யூர் வட்டாட்சியர் மற்றும் மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் பாதிக்கப்பட்ட இருளர்களை சந்தித்து ஆறுதல் கூறி நிவாரண உதவிகளை வழங்கினர். இதைத்தொடர்ந்து காஞ்சிபுரத்தில் செயல்பட்டு வரும் குழந்தைகள் கண்காணிப்பக தொண்டு நிறுவனம் சார்பில், 5 இருளர் குடும்பத்தினருக்கும் அரிசி, மளிகை பொருட்கள், தார்பாய், பெட்ஷீட் மற்றும் பிஸ்கட் போன்றவை வழங்கப் பட்டது. இதில், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் ரமேஷ் குமார், குழந்தைகள் கண் காணிப்பக நிர்வாகி ராஜி, செய்யூர் வருவாய் துறை அதிகாரிகள், ஊராட்சி மன்ற நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்










SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003, Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000